# செய்தி வெளியீடு

ஒன்றிய அரசின் மிஷன் சக்தி (MSK) திட்டத்தின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் சமூகநல அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் நவம்பர் 2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் காலியாக உள்ள மாவட்ட மகளிர் அதிகாரமளிக்கும் மைய ஒருங்கிணைப்பாளர் பணியிடம் காலியாக உள்ளது. பணியிடத்தை நிரப்புவதற்கு ஏதுவாக கீழ்கண்ட பணியிடத்திற்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தகுதியான கல்வி மற்றும் முன்அனுபவ சான்றுகளுடன் கீழ்கண்ட முகவரியில் 26.11.2026 அன்று மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்களை நேரடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., அவர்களால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட மகளிர் அதிகாரமளிக்கும் மைய ஒருங்கிணைப்பாளர் காலி பணியிடத்தை நிரப்புவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற ஏதுவாக பத்திரிக்கை செய்தி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட இணைய தளத்தில் அறிவிப்பு வெளியிடவும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., அவர்களால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## காலிப்பணியிடங்களின் விவரம்:

1. மாவட்ட மகளிர் அதிகாரமளிக்கும் மைய ஒருங்கிணைப்பாளர் : 1 காலிபணியிடம்

கல்வி தகுதி மற்றும் வயது வரம்பு :
சமூகவியலில்/அறிவியல்/உயிரியல்/ஊட்டச்சத்து/மருத்துவம்/சுகாதார மேலாண்மை/சமூகப்பணி/ஊரக மேலாண்மை முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
அதிகபட்ச வயது -40

பணி அனுபவம் : அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களுடன் பணிபுரிந்ததில் 3 வருட முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
மாத ஊதியம் ரூ.35,000/-மட்டும்.

முகவரி:-
மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
மாவட்ட கருவூலம் முதல் தளம்,(Post Office Opposite)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
இராமநாதபுரம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
இராமநாதபுரம்